

கோவை விமான நிலையத்திற்கு வந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கழகத்தினர் உற்சாக வரவேற்பளித்தனர்.



கழக இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ள கழக இளைஞர் அணி 2 வது மாநிலமாநாட்டின், மாநில உரிமை மீட்பு முழக்கத்தினை பட்டித் தொட்டியெங்கும் கொண்டு செல்லும் பணியினை அர்ப்பணிப்பு உணர்வோடு செய்துவரும் கழக இளைஞர் அணி தோழர்கள், ஈரோட்டில் பிரச்சாரத்தின்போது பெரியார் நினைவு இல்லத்தில் இருசக்கர வாகனப் பிரச்சாரப் பேரணியின் ஒருங்கிணைப்பாளர் அ.ராஜா தமிழ் மாறன் மற்றும் பெரியார் மண்டல ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் தந்தை பெரியார் திருவுருவச் சிலைக்கு, மரியாதை செய்தனர்.

# அடுக்கடுக்கான திட்டங்களால் வளர்ச்சி பெறும் திருச்சி!

## அமைச்சர் கே. என். நேரு பேச்சு!

திருச்சி நவ.22-

தமிழக முதல்வர் அவர்களின் முயற்சியில் அடுக்கடுக்கான திட்டங்களால் திருச்சி மிகப்பெரும் வளர்ச்சி அடைந்து வருகிறது என்று நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு கூறினார்.

திருச்சி மெயின்கார்டு கேட் பகுதியில் உள்ள மேரிஸ் பாலம் சுமார் 150 ஆண்டு காலமாக பயன் படுத்தப்பட்டு வருகிறது. இப்பகுதியில் போக்குவரத்து நெரிசலை மேற்கொள்ளும் வகையில் புதிய பாலம் ரூபாய் 34.10 கோடி திட்ட மதிப்பீட்டில் புதிய பாலம் கட்டுமான பணிக்கான அடிக்கல் நாட்டு விழா மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி புதிய பாலத்தில் கட்டுமான பணிகளை துவக்கி வைத்தார்.

தொடர்ந்து திருச்சி-கரூர் பைபாஸ் சாலையில் உள்ள கம்பரசம்பேட்டைக்கு உட்பட்ட முத்தரசநல்லூர் பகுதியில் புதிய பறவை பூங்கா கட்டுமான பணிகளையும் ரூபாய் 13.70 கோடி திட்ட மதிப்பீட்டில் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

இந்தியாவிலேயே இரண்டாவதாக ஆரம்பிக்கப்படும் இந்த பறவைகள் பூங்கா 4ஏக்கர் பரப்பளவில் திட்டமிடப்பட்டு உள்ளது. இதில் சுமார் 1.2ஏக்கர் பரப்பளவில் புதிய பறவைகள் அமைய உள்ளது. பூங்கா சுமார் ஐவகை நிலங்களான குறிஞ்சி, மருதம், பாலை, முல்லை, நெய்தல் ஆகியவை குறிக்கும் வகையில் உள்ளே பணிகள் நடைபெற உள்ளது.

இங்கு சுமார் 2000 பறவைகளை காணும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும் இந்த பூங்காவில் சிறிய வகை குரங்கு, முதலை உள்ளிட்ட பல்வேறு அரிய வகை வனவிலங்குகளும், ஈமு போன்ற பெரிய வகையான கோழிகளும் காட்சிப்படுத்தப்படும் பூங்காவில் சிறுவருக்கான உணவிடமும் அமையப்பட உள்ளது. இந்த பூங்கா சுமார் மூன்று அல்லது நான்கு மாதம் பணிகள் முடிந்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமி டப்பட்டுள்ளது. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஊரக ஊரக வளர்ச்சி சார்பாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்

ரூ 138 கோடி செலவில் கோர்ட்டில் இருந்து அல்லித்துறை வரை சாலை விரிவாக்கம் செய்யப்படும் ரூ 110 கோடியில் திருச்சி மருத்துவமனையில் புதிய கட்டிடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது மேற்கு தொகுதியில் இது வரை பல்வேறு பணிகளுக்காக ரூபாய் 400 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது திருச்சியை சுற்றியுள்ள ஏரிகளை அகலப்படுத்தி ஆளப்படுத்தி அழகு படுத்திட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையில் அதில் முதலாவதாக பிராட்டியூரில் 110 ஏக்கரில் நடைபாதை, சைக்கிளில் ஓடுபாதை, குழந்தைகளுக்கான பூங்கா உள்ளிட்டவைகள் அமைய உள்ளது பஞ்சாபூர் பஸ் நிலையம் ஆயிரம் கோடி ரூபாய் செலவில் பணிகள் நடைபெற்று வருகிறது இது முடியும் தருவாயில் மார்க்கெட் பணிகள் தொடங்கப்படும்.



திருச்சியில் 400 ஏக்கரில் உள்ள புங்கனூர் ஏரி 150 ஏக்கர் உள்ள கள்ளிக்குடி ஏரி மறவனூர் வரை உள்ள ஏரிகளை சீரமைத்து விவசாயத்திற்கும் பொதுமக்களுக்கும் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது அண்ணா சிலையிலிருந்து கம்பரசம் பேட்டை வரை உயர் மட்ட பாலம் அமைக்கும் பணி இந்த ஆண்டு தொடங்க உள்ளோம் உறையூர் பகுதியில் உள்ள ரயில்வே கேட்டை கடக்கும் அளவிற்கு இந்த பாலம் அமைக்கப்படும் சிந்தாமணி பகுதியில் இருந்து ஜங்ஷன் வரை மேல்மட்ட பாலம் அமைய உள்ளது

ஐடி பார்க் பணிகளும் விரைவில் தொடங்கப்பட உள்ளது மெட்ரோ ஆய்வு குழு ஆய்வு செய்து அதற்கான அறிக்கையை தாக்கல் செய்துள்ளது மெட்ரோ திட்டத்தினால் உயர்மட்ட பாலங்கள் பாதிக்கப்படாது எனவே அனைத்து பணிகளும் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றார்

இந்நிகழ்வில் திருச்சி மாநகராட்சி ஆணையர் வைத்திநாதன், மாநகராட்சி மேயர் அன்பழகன், ஸ்ரீரங்கம் சட்டமன்ற உறுப்பினர் பழனியாண்டி, மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி சேர்மன் துரைராஜ் மற்றும் துறை அதிகாரிகள் திமுகவினர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அமைச்சர் கே.என் நேரு :

திருச்சியில் உயர் மட்ட பாலம் மற்றும் மெட்ரோ உள்ளிட்ட இரண்டு திட்டங்களுமே செயல்படுத்தப்படும்.

உயர் மட்ட பாலம் அமைக்கலாம் என்று திட்டம் வகுத்தபோது ஏதும் இடையூறு இருக்க கூடாது என்பதால் தான் மெட்ரோ குறுக்கிட்டார்கள். தற்போது மெட்ரோ நிர்வாகம் அதற்கான தடையில்லா சான்றை வழங்கி விட்டது.

மேரிஸ் மேம்பாலத்தை பொறுத்த வரை ரயில்வே துறையின் பங்கும் இருப்பதால் அடுத்த மூன்று மாதத்திற்குள் பணிகள் நிறைவு பெறும்.

பஞ்சப்பூரில் அமைய இருக்கும் புதிய ஒருங்கிணைந்த பேருந்து நிலையம், புதிய ஐடி காரிடார்,உயர் மட்ட பாலங்கள் என அனைத்து வகையிலும் திருச்சி மாநகரம் மிக பெரிய அளவில் வளர்ச்சி அடைந்து வருகிறது.

சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருக்கும் ஆளுநரின் நிலைபாடு குறித்த கேள்விக்கு ?

சப்ஜக்ட் இன் கோர்ட் என்று கடந்து சென்றார்.

### அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற 70வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில்

# 4,482 பயனாளிகளுக்கு ரூ.33.42 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்

அரியலூர், நவ.22-

அரியலூர் மாவட்டம், வாலாஜாநகரம், தனியார் திருமண மண்டபத்தில் கூட்டுறவுத் துறையின் சார்பில் நடைபெற்ற 70வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவினை தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தலைமையில், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய தாவது,

70வது அகில இந்திய கூட்டுறவு வார விழா 14.11.2023 முதல் 20.11.2023 வரை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் அரியலூர் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான 70 வது அகில இந்திய கூட்டுறவு வார விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இவ்விழா இளைஞர், பெண்கள், நலிந்த பிரிவினர் மற்றும் சுகாதாரத்திற்கான கூட்டுறவு அமைப்புகள் எனும் மையக்கருத்துடன் கொண்டாடப்படுகிறது. பொதுமக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உறுதியான மற்றும் ஆற்றல் வாய்ந்த கருவியாக கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன. இன்றைய கூட்டுறவு வார விழாவில் பயிர்கடன், கால்நடை பராமரிப்புகடன், மகளிர் சுய உதவிக்குழுக் கடன், மாற்றுத்திறனாளிகடன், டாப்செட்கோ கடன், மீன்வளர்ப்பு பராமரிப்புக் கடன், மத்தியகாலக் கடன், வீட்டு அடமானக்கடன், பணியாளர் கூட்டுறவு சங்க மத்திய கால கடன், நீர்பாசன கடன், வீட்டு வசதி கடன் உள்ளிட்ட பல்வேறு கடனுதவிகள் என மொத்தம் 4,482 பயனாளிகளுக்கு ரூ.33.41 கோடி மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தொடர்ந்து பல்வேறு திட்டங்களை மக்கள் நலனுக்காக செயல்படுத்தி வருகிறார்கள். விவசாயிகளின் மீதுள்ள அன்பையும், அக்கறையும் வெளிப்படுத்தும் விதமாக விவசாய பயிர்க்கடன் ரூ.13 ஆயிரம் கோடி மதிப்பில் வழங்கப்பட்டுள்ளது. இதே போன்று கூட்டுறவு வங்கியில் நகைக்கடன் தள்ளுபடி போன்ற வாக்குறுதிகள், விவசாய கடன் தள்ளுபடி ஆகியவை நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், மிகச் சிறப்பான, மகளிர் மத்தியில் மிகப்பெரும் வரவேற்பை பெற்றுள்ள திட்டமான கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் அரியலூர் மாவட்டத்தில் சுமார் 1 இலட்சத்து 57 ஆயிரத்திற்கும் மேலான மகளிர் மாதந்தோறும் பயன்பெற்று வருகின்றனர். இத்திட்டத்தின் காரணமாக கூட்டுறவுத் துறைகளின் மத்திய வங்கிகளில் சுமார் 20,996 புதிய வங்கி கணக்குகள் தொடங்கப்பட்டு அந்த வங்கி கணக்குகளின் மூலம் உரிமைத் தொகையானது வழங்கப்பட்டு வருகிறது. இந்த செயல்பாடுகளால் மகளிர் எளிதாக மத்திய கூட்டுறவு வங்கிகளில் கடனுதவி பெற முடியும்.

இதேபோன்று நம்முடைய ஏழை, எளிய, விவசாய வேலை மற்றும் கூலி வேலைக்கு செல்லும் தாய்மார்கள் பள்ளிக்கு செல்லும் தங்கள் குழந்தைகளுக்கு காலை உணவினை வழங்க முடியாத நிலை இருந்தது. இதன் காரணமாக குழந்தைகளுக்கு சத்து குறைபாடு ஏற்படுவதுடன் படிப்பில் கவனம் செலுத்த முடியாத நிலை இருந்ததை கவனத்தில் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காலை உணவுத் திட்டம் என்ற மகத்தான திட்டத்தினை செயல்படுத்தியுள்ளார். இதன் மூலம் மாணவர்கள் பசியின்றி கல்வி பயிலுகின்றனர். மேலும், காலை உணவுத் திட்டத்திற்கு தேவையான உணவுப் பொருட்கள் கூட்டுறவுத் துறையின் மூலம் வழங்கிட தெரிவிக்கப்பட்டதன் காரணமாக கூட்டுறவுத் துறையின் செயல்பாடுகள் மேலும் சிறப்படைந்து வருகிறது.

மேலும், கூட்டுறவுத் அமைப்புகளை பரவலாக்குதல் மற்றும் எளிமைபடுத்துதல் விதமாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களை பல் நோக்கு சேவை மையமாக மாற்றும் திட்டத்தின் கீழ் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு டிராக்டர்களும், பவர் டிரில்லர்களும், கூட்டுறவுத்துறையின் கீழ் இயங்கும் நியாய விலைக்கடைகளுக்கு பொருட்களை எளிதாக விநியோகம் செய்யும் வகையில் கனரக வாகனங்களும் இன்றையதினம் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு தொடர்ந்து இது போன்று சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு அனைவரும் உறுதுணையாக இருக்க வேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசினார்.

இக்கூட்டத்தில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ம.தீபா சங்கரி,ஒன்றிய பெருந்தலைவர் சுமதி அசோகசக்ரவர்த்தி, அரியலூர் நகர்மன்றத் தலைவர் சாந்தி கலைவாணன், மாவட்ட வருவாய் அலுவலர் பொது மேலாளர் திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் முத்துமாரி, மண்டல மேலாளர் டாப்செட் திருச்சி புண்ணியமூர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் ராமலிங்கம், பொதுமேலாளர், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி முருகன், மண்டல மேலாளர் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபகழகம் ராஜா, துணைப் பதிவாளர் (பொ.வி.தி) அறப்பளி, வருவாய் கோட்டாட்சியர் (அரியலூர்) ராமகிருஷ்ணன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் விஜய லட்சுமி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகர், ஒன்றிய கழக செயலாளர்கள் மா.அன்பழகன்,ரெ.அசோகசக்ரவர்த்தி நகர செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ.இளையராஜா, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூரயிகதிரவன், வாலாஜா நகரம் ஊராட்சி மன்றத் தலைவர் அபிநயா, பல்வேறு துறைகளின் மாவட்ட அளவிலான அதிகாரிகள், கூட்டுறவுத்துறை அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்கள், விவசாயிகள் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், பொதுமக்கள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்- அன்னவாசல் தெற்கு ஒன்றியம் -

# காளாடிப்பட்டியில் மாற்றுக் கட்சியினர் 500 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி -கே.கே.செல்லப்பாண்டியன் முன்னிலையில்!

புதுக்கோட்டை நவ.22-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டம், அன்னவாசல் தெற்கு ஒன்றியம் காளப்பட்டியில் நடைபெற்ற இணைப்பு விழாவில் அ.தி.மு.க., தே.மு.தி.க., அ.ம.மு.க. கட்சியைச் சேர்ந்த 500க்கும் மேற்பட்டோர் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி,

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன்ஆகியோர் முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

இந்நிகழ்வுகளில் கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைத் தலைவர் த.சந்திரசேகரன், விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே. ஆர்.என்.போஸ், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் செ.அசோக் பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ். எஸ்.கருப்பையா, ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், தவ.பாஞ்சாலன், ஆர்.ஆர்.சாமிநாதன், ஆர். ஆர்.எஸ்.மாரிமுத்து, கே.பி. அய்யப்பன், குளவாய்ப் பட்டி சி.சண்முகம்,

பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், எம்.செந்தில்குமார், அன்னவாசல் பேரூர் செயலாளர் முகம்மது நிஷா, மாவட்ட கவுன்சிலர்கள் துவாரை டி.செல்வம், கை.பழனிச்சாமி, அணி அமைப்பாளர்கள் கே.எஸ். ச.இளையச் சூரியன், எஸ். வி.ஆர்.ஸ்டாலின், பொன். பாரிவள்ளல், டாக்டர் அமானுல்லா, சாங்கிராப்பட்டி ரவி, பாண்டியன், சண்முகம், தாயினிப்பட்டி கண்ணன், சித.சண்முகம் , மாங்குடி ஆர்.ஜே. அண்ணாத்துரை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கழகத்தில் இணைந்த அனைவருக்கும் வேட்டி, சேலை வழங்கப் பட்டது.

### பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறுநிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தில்

# தமிழ்நாட்டிற்குகுடியரசுத்தலைவரால்வழங்கப்பட்ட-சிறந்தசெயல்திறனுக்கானவிருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, நவ.22-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (20.11.2023) தலைமைச் செயலகத்தில், நவம்பர் 5 அன்று புது டெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்ற உலக உணவுத் திருவிழா நிகழ்ச்சியில், பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தில் சிறந்த செயல் திறனுக்காக இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட விருதினை, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

அதன் விபரம் வருமாறு:

நமது நாட்டில், அமைப்புசாரா உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை வலுப்படுத்தும் விதமாக "பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டம்" 60 சதவீதம் ஒன்றிய அரசின் நிதி பங்களிப்புடனும் மற்றும் 40 சதவீதம் மாநில அரசின் நிதி பங்களிப்புடனும் 2020 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம், தனிநபர்கள் (Individuals), சுய உதவிக்குழுக்கள் (SHGs), உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள்(FPOs) மற்றும் கூட்டுறவு அமைப்புகளும்(Cooperatives) புதிய தொழில் தொடங்கவோ அல்லது ஏற்கனவே செயல்பட்டு வரும் தொழிலை விரிவாக்கம் செய்திடவோ 10 சதவீதம் பங்களிப்பு தொகையுடன் 35 சதவீதம் மானியமாக அதிகபட்சம் ரூ.10 இலட்சம் மானியத் தொகையுடன் கடனுதவி வழங்கப்படுகிறது.

மேலும், சுய உதவிக்குழுவில் உள்ள உறுப்பினருக்கு விதை மூலதனம் (Seed Capital) மூலமாக சிறு கருவிகள் வாங்கிட அதிகபட்சமாக 40 ஆயிரம் ரூபாய் சுழல் நிதியாக வழங்கப்படுகின்றது. பொதுவான உட்கட்டமைப்பு வசதிகள் (Common Infrastructure) உருவாக்கிட குழுக்களுக்கு கடன் மானியம் ரூ.3 கோடி வரை வழங்கப்படுகிறது. இக்குழுக்களுக்கு சந்தைப்படுத்துதல் மற்றும் வர்த்தக முத்திரைக்காக (Marketing & Branding) ஏற்படும் செலவினத்தில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது.

தொழில்முனைவோர் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை தயார் செய்திடவும், இத்தகைய தொழில் முனைவோருக்கு புதிய தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சி அளித்திடவும், பதப்படுத்துதல், சிப்பம் கட்டுதல், சேமிப்பு மற்றும் ஆய்வக வசதிகளை அனைத்து தனிநபர் மற்றும் குழு நிறுவனங்களும் பயன்படுத்திடவும் தொழில் கற்கும் மையங்கள் (Common Incubation Centre) உதவுகின்றன. இதனை நிறுவிட அரசு நிறுனவங்கள் (100 %) மற்றும் தனியார் நிறுவனங்கள் (50%) ஆகியவற்றிக்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

202021 முதல் 202324 வரை தமிழ்நாட்டில், தனிநபர் பிரிவின் கீழ், இதுவரை 8,410 நபர்களுக்கு கடன்கள் ஒப்பளிப்பு செய்து ரூ.152.20 கோடி மானியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 2,351 விவசாயிகளும், 4,635 பெண்களும் 777 ஆதிதிராவிடர் (SC) பிரிவினரும் மற்றும் 68 பழங்குடியினர் (ST) பிரிவினரும் மானியத்துடன் கடன்பெற்று தொழில் துவங்கி பயனடைந்துள்ளனர்.

உலகிற்கு இந்திய உணவுப் பாரம்பரியத்தை அறிமுகம் செய்திடவும் பல்வேறு உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகளை இந்தியாவில் நிறுவிடும் பொருட்டும் உலக உணவுத் திருவிழா (World Food India 2023) இவ்வாண்டு நவம்பர் மாதம், 3, 4 மற்றும் 5 ஆகிய நாட்களில் புதுடெல்லி பிரகதி மைதானத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியாளர்கள், அரசாங்கப் பிரதிநிதிகள், வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் இறுதி நாளான நவம்பர் 5 அன்று, பிரதமரின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தில் சிறந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு உள்ளிட்ட ஐந்து மாநிலங்களுக்கு சிறந்த செயல் திறனுக்கான விருது இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலாளர் திருமதி. அர்ச்சனா பட்நாயக், தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் எல்.நிர்மல்ராஜ் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத்தலைவர்–முதலமைச்சர் மு.கஸ்டாலின் அவர்கள் நல்லாசியுடன், கழக இளைஞரணி செயலாளர்–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமை ஏற்று சேலம் கழக இளைஞர் அணியின் மாநாட்டிற்கான மாபெரும் இருசக்கர வாகன பிரச்சார பேரணியை கன்னியாகுமாரியில்துவக்கி வைத்தார். கரூர் மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வாழ்த்துக்களுடன் கரூரில் மோட்டார் சைக்கிள் பேரணியில் வந்தவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.